# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
**முறையீட்டு மனு எண். 059/2016**
**ஆணை நாள். 02 –11 –2018**

*****

**திரு. எஸ். சண்முகவேல்,**
**42, பிள்ளையார் தென்வடல் தெரு,**
**சேத்தூர் – 626121,**
**இராஜபாளையம் வட்டம்,**
**விருதுநகர் மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்.**

**1.திருமதி க.முருகேஸ்வரி,**
**முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர்,**
**சேத்தூர் பேரூராட்சி,**
**2.செயல் அலுவலர்,**
**சேத்தூர் பேரூராட்சி,**
**இராஜபாளையம் வட்டம்,**
**விருதுநகர் மாவட்டம்.**
**3.திருமதி கோ.பாண்டித்தாய்,**
**உதவிப் பொறியாளர்,**
**சேத்தூர் பேரூராட்சி,**
**விருது நகர் மாவட்டம். -- எதிர் மனுதாரர்கள்.**

**ஆணை.**

விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், சேத்தூர், 42, பிள்ளைமார் தென்வடல் தெருவினை சேர்ந்த திரு. S. சண்முகவேல், என்பவரின் 27.01.2016 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 01.02.2016 அன்று பெறப்பட்டு, முறையீட்டு மனு எண். 059/2016 ஆக பதிவு செய்யப்பட்டது. மேற்படி முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு. S. சண்முகவேல், முறையீட்டு மனுதாரர், தனது முறையீட்டு மனுவில், விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சி முன்னாள் தலைவர், செயல் அலுவலர் மற்றும் உதவிப்

பொறியாளர் ஆகியோர்கள் மீது கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகளை தெரிவித்து விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்

(1) சேத்தூர் பேரூராட்சியில் பொங்கல் திருநாளை முன்னிட்டு, 8 தெருக்களுக்கு கிராவல் மண் பரப்பி, தெருக்களை சரி செய்ததாக, தனித்தனியே 8 செலவின சீட்டுகள் மூலம் மொத்தம் ரூ.79,100/– செலவிடப்பட்டுள்ளதாகவும், (மேலும் சேத்தூர் பேரூராட்சியில் வண்ணார் தெரு என்ற தெருவே இல்லாத நிலையில் ரூ.9,950/– மேற்படி வண்ணார்த் தெரு பணிக்காக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.) அதே தெருக்களுக்கு மீண்டும் பொறியாளர்கள் மூலம் தனியாக மதிப்பீடு தயாரித்து கிராவல் அடித்ததாக 21.08.2015ல் ரூ.1,96,666/– செலவினப் பட்டியல் தயாரித்து பணம் எடுத்துள்ளதாகவும், மேற்படி பணிகளுக்கு சேத்தூர் பேரூராட்சியின் முன்னாள் தலைவி திருமதி.முருகேஸ்வரி, தனது கணவரின் சகோதரர் திரு.அய்யாத்துரை என்பவருக்கு ஒப்பந்தம் வழங்கி மோசடி செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

(2) சேத்தூர் பேரூராட்சி, சேத்தூர் வருவாய் கிராமம் சர்வே எண்.394–ல், 1 ஏக்கர் நிலத்தினை வீட்டு மனைப் பிரிவுகளாக பிரித்து, தலைவி திருமதி.முருகேஸ்வரியே, தன்னிச்சையாக அதிகார துஷ்பிரயோகம் செய்து மனைப்பிரிவு அனுமதி வழங்கியுள்ளதாகவும், ரூ.10.00 லட்சம் பெற்றுக் கொண்டு, மதுரை நகரமைப்பு துணை மண்டல இயக்குநர் அவர்களால் வழங்கவேண்டிய மனைப்பிரிவு அனுமதியினை, தலைவர் திருமதி.முருகேஸ்வரி லஞ்சம் பெற்றுக் கொண்டு மனைப்பிரிவு அனுமதி வழங்கியுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

(3) சேத்தூர் பேரூராட்சி பகுதியில் சிவசங்கரி ஸ்டோர் என்ற ஒரு கடையே இல்லாத நிலையில், மேற்படி கடையில் குடிநீர் உதிரி பாகங்கள் வாங்கியதாக சுமார் ரூ.1,42,765/–க்கு பட்டியல் போடப்பட்டுள்ளதாகவும், மேற்படி கடை சேத்தூர் பேரூராட்சி, பேருந்து நிலையத்திற்கு எதிரில் உள்ளதாக கடையின் விலாசம் தெரிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து, மேற்படி சேத்தூர் பேரூராட்சி பேருந்து நிலையத்தின் எதிரில் குமார் ஹார்டுவேர்ஸ், என்ற இரு கடைகள் மட்டுமே உள்ளதாக தெரிவித்து, இல்லாத கடையில் 2013–ஆம் ஆண்டு குடிநீர் உதிரி பாகங்கள் வாங்கியதாக போலியான பட்டியல் தயாரித்து தொகை பெறப்பட்டது என்பது குறித்து விசாரணை கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 09.02.2016 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கக் கோரி சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 43/2015/நாள். 11.03.2016ன் மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான தனது விளக்க அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார்.

மேற்படி அறிக்கை பரிசீலிக்கப்பட்டதில், இவ்வறிக்கையில் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள 16.04.2015 முதல் 27.04.2015 வரை 8 தெருக்களுக்கு கிராவல் மண் அடித்த வகையில் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினம் ரூ.79,100/–க்கான விவரங்களோ செலவின சீட்டு நகல்களோ சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், முறையீட்டு மனுதாரர் குறிப்பிட்டுள்ள வண்ணார் தெரு தொடர்பாக எவ்வித குறிப்பான விவரங்களும் அளிக்கப்படவில்லை. ஆனால் 21.08.2015ல் உரிய மதிப்பீட்டின் அடிப்படையில் செலவிடப்பட்டுள்ள செலவினத் தொகை ரூ.1,96,666/–க்கு மட்டும் விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஏனவே மேற்படி ஆவணங்களை பெற்று பரிசீலிக்கவும் செயல் அலுவலரது விளக்கங்களை உரிய விசாரணை மூலம் பெற்று பரிசீலிக்கவும் இம்முறைமன்ற நடுவத்தால் முடிவெடுக்கப்பட்டது.

இதனிடையே, இம்முறைமன்ற நடுவ 26.03.2016 நாளிட்ட அழைப்பாணையில் முறையீட்டு மனுதாரரை, தனது முறையீட்டு மனு தொடர்பான விசாரணைக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 28.04.2016 அன்று ஆஜராகக் கோரி ஆணையிடப்பட்டது. அதன்படி திரு.S.சண்முகவேல், முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் 28.04.2016அன்று நேரில் ஆஜராகி மேற்படி முறையீட்டு மனு தொடர்பான தனது விளக்கத்தினை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........சேத்தூர் பேரூராட்சியில் சாலைகளை பராமரித்ததாக 28.1.2015 நாளிட்ட செலவு சீட்டு எண். 194ன்படி ரூ. 1,96,666/– போலி பில் கொடுத்து பணம் எடுத்துள்ளதாகவும், தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ், தன்னால் செயல் அலுவலர் மூலம் பெறப்பட்ட பதிலில், புகாரில் குறிப்பிட்டுள்ள தெருக்களுக்கு செம்மண் அடித்ததற்கு பில் போடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள வண்ணார் தெரு சேத்தூரில் இல்லை எனவும், இதில் ஒப்பந்தக்காரராக பேரூராட்சி தலைவர், திருமதி.முருகேஸ்வரியின் கணவரின் சகோதரர் திரு.அய்யாத்துரை என்பவர் ஆவார் எனவும் தெரிவித்துள்ளார்.

சேத்தூர் வருவாய் கிராமம் சர்வே எண். 394ல் ஒரு ஏக்கர் நிலத்தை வீட்டு மனைப் பிரிவுகளாக திருமதி . க. முருகேஸ்வரி, தன்னிச்சையாக மதுரை நகரமைப்பு துணை மண்டல அலுவலர் அங்கீகாரம் இல்லாமல் மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும், சேத்தூர் பேரூராட்சி பகுதியில் சிவசங்கரி ஸ்டோர்ஸ் மூலம் குடிநீர் உதிரி பாகங்கள் மற்றும் இதர பொருட்கள் வாங்கியதாக ரூ 1,42,765/–க்கு பில் போடப்பட்டுள்ளதாகவும் ஆனால் பேரூராட்சி பகுதியில் இது போன்ற பெயரில் ஒரு கடை இல்லை எனவும் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

பேரூராட்சியின் செயல் அலுவலரின் கடிதத்தில் சிவசங்கரி ஸ்டோர்ஸ் என்ற நிறுவனம் பேரூராட்சி பேருந்துப் பகுதிக்கு அருகில் உள்ளது என்றும், அந்த கடையின் TIN Number. 33106044737 என்று கூறப்பட்ட விளக்கத்திற்கு தனது விளக்கத்தினை கீழ்க்கண்டவாறு முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ளார்.

தான் மனு அனுப்பிய பின்னர்தான் இந்த TIN.எண் கொண்ட பலகை அமைத்துள்ளதாகவும், 2013–14 ஆண்டுகளில் சிவசங்கரி ஸ்டோர்ஸ், சிவசங்கரி எலக்ட்ரிகல்ஸ் என்ற நிறுவனமே இல்லை எனவும், ஆனால் குமார் ஸ்டோர்ஸ், குமார் ஹார்டுவேர் என்ற கடைகளில் தான் பொருட்கள் வாங்கப்பட்டுள்ளது எனவும், மேற்படி சேத்தூர் சிவசங்கரி ஸ்டோர்ஸ் மற்றும் சிவசங்கரி எலக்ட்ரிகல்ஸ் ஆகியவற்றில் 2013–14ஆம் ஆண்டில் வாங்கப்பட்ட ரூ. 1,50,788/–க்கான தணிக்கைத் தடை குறித்த விவரங்களையும் தற்போது சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்துள்ளார். அம்மன் நகரில் மனைப்பிரிவு அங்கீகரிக்கப்பட்டதில் பேரூராட்சித் தலைவர் திருமதி.முருகேஸ்வரி கையொப்பமிட்டுள்ள நகலும், ஏற்கனவே அவரால் இன்னொரு கடிதத்தில் கையொப்பமிட்டுள்ள கையெழுத்தின் நகலும் ஒப்புகைக்காக சமர்ப்பிப்பதாகவும், இம்முறைகேடுகளுக்கு செயல் அலுவலரும் உடந்தை எனவும் தற்போது அவர் தற்காலிக பணி நீக்கத்தில் மதுரையில் உள்ளதாகவும் அவரின் பெயர் தனக்கு தெரியாது எனவும் மேற்படி செயல் அலுவலர் செப்டம்பர், 2015க்கு முன்பே சேத்தூர் பேரூராட்சியினை விட்டு சென்று விட்டார் எனவும் முறையீட்டு மனுதாரர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 02.05.2016 நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விசாரணைக்கு சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவத்தில் 28.06.2016 அன்று ஆஜராக அழைப்பாணையிடப்பட்டது.

சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.இ. முருகன், இம்முறைமன்ற நடுவத்தில் 28.06.2016 அன்று ஆஜராகி தனது வாக்குமூலத்தினை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"......தான் சேத்தூர் பேரூராட்சியில் 04.09.2015 முதல் பணி புரிவதாகவும், மனுதாரர் திரு.சண்முகவேல், அவர்களின் மனு குறித்து தனக்கு தெரியும் எனவும், மனுதாரர்

திரு.சண்முகவேல், பேரூராட்சித் துறையில் பணிபுரிந்து முறைகேடுகளுக்காக பணி நீக்கம் செய்யப்பட்டவர் எனவும், தனது பெயரிலும், வேறு சிலருடைய பெயரிலும் பொய் புகார் எழுதும் பழக்கம் உள்ளவர் எனவும் தெரிவித்துள்ளார். 11.12.2013ல் வணிக வரித்துறையினரால் சிவசங்கரி ஸ்டோர்ஸ் என்ற பெயரில் TIN Number 33106044737 பெற்றமைக்கான அத்தாட்சி மற்றும் பெறப்பட்ட பொருட்களுக்கான விலைப்பட்டியல்களையும் இணைத்துள்ளதாகவும், மனுவில் குறிப்பிட்டுள்ளது போல் சிவசங்கரி ஸ்டோர்ஸ், சிவசங்கரி எலக்ட்ரிகல்ஸ் என்ற நிறுவனம் இல்லை என குறிப்பிட்டுள்ளதை தான் மறுப்பதாகவும், மேற்கண்ட கடையில் வணிகவரித்துறையினரால் வணிக வரி பதிவு செய்யப்பட்டு விற்பனைக்கான எண்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு வண்ணார் தெரு என்ற பெயரில் மொத்தமாக 1 முதல் 18 வார்டுகள் தேரோடும் வீதியில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும், பணியின் தரம் குறித்து பொறியாளர்களின் சான்றும் உள்ளதாகவும் அனைத்து பணிகளையும் மண்டல உதவி செயற்பொறியாளரால் மேல் ஆய்வு செய்யப்பட்டு உரிய பதிவுகள் செய்யப்பட்டு முறைப்படி தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மாரியம்மன் நகர் மற்றும் அம்மன் நகர் போன்ற இடங்களில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் குறித்து பலகைகள் வைக்கப்பட்டுள்ளதாகவும், மனுவில் குறிப்பிட்டுள்ள அம்மன் நகர் வீட்டு மனைகளாக பிரித்தற்கு பேரூராட்சி அலுவலகத்தின் சார்பாக எந்த அங்கீகாரமும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். அதற்கான கோப்புகள் எதனையும் மனுதாரர் சமர்ப்பிக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் குறிப்பிட்ட மனைப்பிரிவு, அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு எனவும், பேரூராட்சி மன்றத் தலைவி கையொப்பம் குறித்து காவல் துறைக்கு கடிதம் எழுதப்பட்டதாகவும், சேத்தூர் காவல் ஆய்வாளர் அவர்களுக்கு 31.08.2015 அன்று பேரூராட்சி மன்றத் தலைவரின் கையொப்பம் இல்லை என்றும், மன்றத் தலைவர் மீது சரியான நடவடிக்கை எடுக்குமாறும் தன்னால் கடிதம் எழுதப்பட்டதாகவும், காவல் துறையினர் விசாரித்து பேரூராட்சித் தலைவியின் கையொப்பம் இல்லை என கோப்பினை முடித்துவிட்டதாகவும் தெரிவதாக தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக காவல்துறைக்கு நினைவூட்டு ஏதும் அனுப்பப்படவில்லை எனவும், இது குறித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக தனக்கு தெரியாது எனவும் தெரிவித்துள்ளார். வீட்டு மனைப்பிரிவு அங்கீகார ஆவணத்தில் பேரூராட்சி தலைவியின் கையொப்பம் உண்மையானது இல்லை என்ற நிலையில் சம்பந்தப்பட்ட பகுதியில் வீட்டு மனைகள் பிரிப்பதற்கான இது போன்ற ஒரு போலி ஆவணத்தை தயார் செய்த நபர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பது தெரியவில்லை எனவும், இது சம்பந்தமாக காவல் துறையினரிடமிருந்து தனக்கு பதில் கடிதம் ஏதும் வரவில்லை எனவும், அம்மன் நகர் பகுதியில் இதுவரை ஒரு மனைகூட விற்பனை செய்யப்படவில்லை எனவும், அம்மன் நகர் சர்வே எண்.394/1ல் எந்த மனையும் விற்கப்படவில்லை என்பதற்கான சான்று மற்றும் புகைப்படங்களையும் இணைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். இக்காலகட்டத்தில் செயல் அலுவலராக திரு.ஞானசேகரன் என்பவர் இருந்ததாகவும், தற்போது அவர் தற்காலிக பணி நீக்கத்தில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் குறிப்பிட்டுள்ளபடி போலி பணிகள் ஏதும் நடக்கவில்லை எனவும் உண்மையில் பணிகள் நடந்தமைக்கான ஆதாரமாக புகைப்படங்களை சமர்ப்பிப்பதாகவும், ஒவ்வொரு வார்டிலும் கிராவல் அடித்தமைக்கான அனைத்து பணி அளவு மற்றும் மேலளவு செய்யப்பட்டு அளவுப் புத்தகத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு தொகை பட்டுவாடா செய்யப்பட்டதாகவும், தலைவரின் கணவர் ஒப்பந்த பணிகள் ஏதும் செய்யவில்லை எனவும், தலைவரின் சித்தப்பா மகன் திரு.அய்யாதுரை, ஒப்பந்தக்காரர், தற்போதைய தலைவர் பதவிக்கு வருவதற்கு முன்பிருந்து இப்பேரூராட்சியில் பணிகளை செய்வதாகவும், தலைவரின் உறவினர் மட்டுமே தற்போது ஒப்பந்தப் பணிகள் செய்வதாக குறிப்பிட்டுள்ளது சரியானதல்ல எனவும் தெரிவித்துள்ளார். மனுதாரர் குறித்து தான் கடித எண்.43/2015/நாள்.24.06.2016ல் ஒரு கடிதத்தினை

சமர்ப்பித்துள்ளதாகவும், மனுதாரர் தன்னிடம் ஒரு குறிப்பிட்ட தொகையினை தனக்கு மாதந்தோறும் தரவேண்டும் எனவும், தவறினால் தன் மீது பொய் புகார் மனுக்கள் போட்டு விடுவேன், திரு. ஞானசேகரன், செயல் அலுவலரை போல் தன்னையும் தற்காலிக பணி நீக்கத்தில் செல்ல தேவையான நடவடிக்கைகளை எடுப்பேன் என மிரட்டுவதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி திரு. ஞானசேகரன் தற்காலிக பணி நீக்கத்தில் மதுரையில் வசிப்பதாகவும் அவரின் தற்காலிக பணி நீக்கத்திற்கும் மனுவில் குறிப்பிட்டுள்ள எந்த செய்திக்கும் தொடர்பு இல்லை எனவும், துப்புரவு பணியாளர் பணியினை சரியான சுழற்சி முறையில் பணியமர்த்தாததால் அதன் அடிப்படையில் அவர் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் மேற்படி செயல் அலுவலர் தனது 24.06.2016 நாளிட்ட ஒரு அறிக்கையினை சமர்ப்பித்துள்ளார். மேற்படி அறிக்கையில் முறையீட்டு மனுதாரர் திரு எஸ்.சண்முகவேல் என்பவர் கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்து, பணியில் இருக்கும்போது செய்த முறைகேடுகள் காரணமாக பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர் எனத் தெரிவித்துள்ளார்.

சேத்தூர் பேரூராட்சியில் 2013–ஆம் ஆண்டு காலியாக இருந்த பேரூந்து நிலைய காவலர் மற்றும் டிராக்டர் டிரைவர் பணியிடங்களை விதிமுறைகளின்படி பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும், அதன் அடிப்படையில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பட்டியல் கோரப்பட்டு SC.Priority–ல் பணியிடம் பூர்த்தி செய்யப்பட்டதாகவும், அதனை அப்போதைய சிவகங்கை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களால் சரிபார்க்கப்பட்டும், விருதுநகர் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறை மூலம் தணிக்கை முடிக்கப்பட்டும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறையீட்டு மனுதாரர், மேற்படி பணியிடத்தை சேத்தூர் பேரூராட்சியில் பெருவாரியாக உள்ள OC இனத்தவரான தனது மகனுக்கு வழங்காமல் SC இனத்தவருக்கு வழங்கக்கூடாது என தொடர்ச்சியாக பேரூராட்சியில் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் புகார் மனு அனுப்பியவண்ணம் இருந்ததாகவும், அதன்படி மேற்படி பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்ட விவரத்தினை 07.10.2015 அன்று கோரியதைத் தொடர்ந்து, பேரூராட்சி அலுவலக கடித ந.க.எண். 296/2015/நாள்.03.11.2015ன்படி மேற்படி தகவலை பெற்றுள்ளார் என்றும், மேற்படி பணி தனது மகனுக்கு அளிக்கப்படவில்லை என்பதால் தொடர்ச்சியான புகார்கள் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்படியும், நேரடியாகவும் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகத்திலும் அளித்த வண்ணம் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதனால் இரு பிரிவினரிடையே மோதல் ஏற்பட்டு ஜாதிப்பிரச்சினை மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் சூழ்நிலை உருவாகி வருவதாகவும், முறையீட்டு மனுதாரர் தினசரி பேரூராட்சி செயல் அலுவலரை தனது மகனுக்கு பணி நியமனம் வழங்கவேண்டும் என மிரட்டி வருவதாகவும் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரரால் பேரூராட்சியில் நிர்வாக சீர்கேடு மற்றும் பிரச்சினைகள் ஏற்பட்டு வருவதாகவும் இதனால் இரு செயல் அலுவலர்கள் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையின் வழக்கு எண். 20619/2015, நாள்.25.11.2015ன் படியும், மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித ந.க.எண்.57709/2015/நாள்.25.11.2015ன் படியும் 3,000 குடிநீர் இணைப்புகள் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் மேற்படி குடிநீர் இணைப்புகள் பேரூராட்சி பொது மக்களுக்கு வழங்கக் கூடாது என சென்னை உயர் நீதி மன்ற மதுரைக் கிளையில் முறையீட்டு மனுதாரர் திரு.எஸ்.சண்முகவேல், வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், மேற்படி வழக்கு தள்ளுபடி

செய்யப்பட்டதாகவும் தனது அறிக்கையில் சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுதாரர், தான் நினைத்த காரியம் நடக்கும் வரை தொடர்ச்சியாக புகார் மனு அளித்து வருவேன் என சபதம் எடுத்துள்ளதாகவும், மேலும் ஏற்கனவே பணி நியமனம் தொடர்பாக தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் தகவல் அளித்தும், தற்போது 2013 முதல் 2016 முடிய பணி நியமனங்கள் பற்றிய கோப்புகள் கோரி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு செய்துள்ளதாகவும், மேற்படி நபர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தனது அறிக்கையில் பேரூராட்சி செயல் அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 28.07.2016 நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக, உரிய தல ஆய்வு மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு, 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4)(a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தனது கடித ந.க. எண். 1766/2015/பே.1/நாள்.06.09.2016ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

மதுரை மண்டலம், விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சியில் பங்குனி பொங்கல் திருநாளை முன்னிட்டு வார்டு எண். 4,3,9,10,17,15 ல் உள்ள தெருக்களில் கிராவல் மண் அடித்து ஜே.சி.பி மூலம் பள்ளங்களை சரி செய்த வகையில், சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு தொகை வழங்கப்பட்டதில், மேற்படி பணிகளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, அதில் குறைந்த விலைப்புள்ளியினை அங்கீகரித்தும், மேலும் பேரூராட்சி உதவிப் பொறியாளரால் உத்தேச மதிப்பீடு தயாரிக்கப்பட்டும், உரிய விதிமுறைகளை கடைபிடித்து பணிகள் நடைபெற்றதற்கு பொறியாளர் சான்று பெற்று தொகை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேத்தூர் பேரூராட்சியில் வார்டு எண் 1 முதல் 18 வார்டுகளில் உள்ள தெருக்களில் பழுதடைந்த தார்ச்சாலைகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு, ரூ.2.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை 2014–15ஆம் ஆண்டு பொது நிதியில் இருந்து மேற்கொள்வதற்கு தீர்மான எண்.766/நாள்.31.10.2011–ல் அங்கீகரிக்கப்பட்டு அதன் அடிப்படையில் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித ந.க.எண். 59668/2014/பே.1/நாள்.05.01.2015ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இப்பணிக்கான தொழில் நுட்ப அனுமதி உதவி செயற்பொறியாளரின் எண்.143/2014–15 நாள். 06.01.2015ன்படி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்படி பணியினை செய்வதற்கு உரிய விதிமுறைகளின்படி 29.01.2015 ல் ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு, குறைந்த விலைப்புள்ளி கொடுத்த திரு.அய்யாதுரை, என்பவரது ஒப்பந்தபுள்ளி அங்கீகரிக்கப்பட்டு, மேற்படி ஒப்பந்தக்காரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டின்படி வார்டு எண் 1 முதல் 10 வரையில் உள்ள தெருக்களில் மட்டும் கிராவல் பரத்தப்பட்டு பணிகள் நடைபெற்றுள்ளதாகவும், மேற்படி பணிகள் உதவிப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரால் அளவுகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் கண்காணிக்கப்பட்டு 29.04.2015ல் உதவி செயற்பொறியாளரால் பட்டியல் மேலொப்பம் செய்யப்பட்டு, 2.14லட்சம், ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சேத்தூர் பேரூராட்சியில் வார்டு எண்கள். 4,3,9,10,17,15ல் உள்ள தெருக்களில் கிராவல் மண் அடித்து ஜே.சி.பி.மூலம் மேடு பள்ளங்களை சரி செய்த வகையில் சம்பந்தப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு தொகை வழங்கப்பட்டதும், வார்டு எண் 1 முதல் 10 முடிய உள்ள தெருக்களில் பழுதடைந்த தார்ச்சாலைகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.2.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு ரூ.2.14 லட்சம் தொகை வழங்கப்பட்டதும், வேறு வேறு பணிகள் எனவும் ஏற்கனவே செய்யப்பட்ட

பணிகளுக்கு மீண்டும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அதே பணிகள் செய்யப்பட்டமைக்கு தொகை வழங்கப்படவில்லை எனவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சேத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண் 394ல் ஸ்ரீ அம்மன் நகர் என்கிற பெயரில் வார்டு 2, 11 ல் மெயின்ரோடு என்ற இடத்தில் வீட்டு மனைப் பிரிவுகளாக போடப்பட்டது மொத்தம் 1 ஏக்கர் பரப்பளவு ஆகும் எனவும், இதில் பேரூராட்சி மன்றத் தலைவரே கையொப்பமிட்டு அனுமதி வழங்கியுள்ளது தொடர்பாக, ஏற்கனவே மேற்படி பேரூராட்சி துணைத் தலைவரால் புகார் அளிக்கப்பட்டதின் அடிப்படையில், மேற்படி பொருள் தொடர்பாக காவல்துறை மூலம் உரிய நடவடிக்கை மேற்கொண்டு அதற்கான அறிக்கையினை சமர்ப்பிக்க ந.க.எண்.38656/2015/பே.3/நாள்.19.08.2015ன்படி, சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தியதாகவும், அதன்படி சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண்.188/2015/அ.1/நாள். 31.08.2015ன்படி சேத்தூர் காவல் நிலைய ஆய்வாளருக்கு உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சேத்தூர் பேரூராட்சியில் சிவசங்கரி ஸ்டோர்ஸ் என்ற நிறுவனத்திற்கு வணிக வரித்துறை மூலம் அங்கீகாரம் (TIN.No.33106044737) சான்று பெறப்பட்டுள்ளதாகவும், மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு மேற்படி கடையே சேத்தூர் பேரூராட்சியில் இல்லை என்ற விவரம் உண்மைக்கு புறம்பானது எனவும் தனது அறிக்கையில் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

மனுதாரரது புகார் மனு, மற்றும் வாக்குமூலத்தில் ரூ.1,96,666/–க்கு பணிகள் செய்யாமலேயே போலி பட்டியல் மூலம் பணம் எடுத்துள்ளதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள தெருக்களில் மேற்படி செலவினத்தில் கிராவல் நிரப்பப்பட்டதாக சேத்தூர் பேரூராட்சியிலிருந்து மனுதாரருக்கு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டுள்ள பதிலில் (ந.க.எண். 337/2015/நாள் 26.11.2015) வண்ணார் தெரு என தகவல் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில், மனுதாரர் வண்ணார் தெரு என்ற பெயரில் தெரு ஏதும் இல்லை என குறிப்பிட்டு, மேற்படி செலவினம் போலியானது என புகார் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக மனுதாரர் குறிப்பிட்டுள்ள சேத்தூர் பேரூராட்சியின் பொதுத் தகவல் அலுவலரால் அளிக்கப்பட்டுள்ள பதில்கள் அடங்கிய கடித ந.க.எண். 337/2015/நாள். 26.11.2015ன் நகல் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது. அதில் மேற்படி சாலைப் பராமரிப்பு பணி, வார்டு எண் 1ல் இல்லத்தார் கிணற்றுத் தெரு, வார்டு எண் 2ல் முகவூர் ரஸ்தா (மந்தைத் தெரு) வார்டு எண் 3 ல் கொல்லங்கொண்டான் ரஸ்தா, வார்டு எண் 3ல் பிள்ளையார் கோவில் தெரு, வார்டு எண்.3ல் முகவூர் ரஸ்தா, வார்டு எண்.7ல் முகவூர் ரஸ்தா, வார்டு எண் 8ல் இந்திரா காலனி, வார்டு எண் 9ல் முகவூர் ரஸ்தா, வார்டு எண்.10ல் அம்மன் சன்னதி தெரு, வார்டு எண் 12 ல் இந்திரா காலனி தெரு, வார்டு எண் 13ல் பரதேசி ஊரணித் தெரு, வார்டு எண் 14ல் மந்தைத் தெரு, வார்டு எண் 15ல் எக்கலாதேவி அம்மன் கோவில் முன்பு, வார்டு எண்16ல் பாப்பான் கிணற்றுத் தெரு, வார்டு எண் 17ல் அரண்மனைத் தெரு, வார்டு எண் 17,பிள்ளைமார் தென்வடல் தெரு, ஆகிய தெருக்களில் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல் வண்ணார் தெரு என்ற தெரு இடம் பெறவில்லை. மேலும் பேரூராட்சியின் மேற்படி பணிகள் தொடர்பான ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மேற்படி பணிகளுக்கான ஒப்பந்தச் சான்று மற்றும் முடிவறிக்கையிலும் வார்டு எண். 1 முதல் 18 வரை உள்ள பழுதடைந்த சாலைகளில் செப்பனிடும் பணி என குறிப்பிடப்பட்டு தொழில் நுட்ப அலுவலர்களது சான்றொப்பங்களும் இடப்பட்டுள்ளன. மேலும் மேற்குறிப்பிட்ட பேரூராட்சி உதவி இயக்குநரது அறிக்கையிலும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டது குறித்து ஆய்வு செய்து உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் குடிநீர் உதிரி பாகங்கள் கொள்முதல் செய்யப்பட்ட சிவசங்கரி ஸ்டோர்ஸ் என்னும் நிறுவனம்

தொடர்பான மனுதாரரது புகார் குறித்தும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் ஆய்வு செய்யப்பட்டு மனுதாரருடைய புகார் ஏற்புடையதல்ல என அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள வண்ணார் தெரு உட்பட 8 தெருக்களுக்கு கிராவல் மண் அடித்த பணிகள் தொடர்பாக 16.04.2015 முதல் 27.04.2015 வரை 8 தனித்தனி செலவின சீட்டுக்கள் மூலம் செலவிடப்பட்டுள்ள மொத்த செலவினத் தொகை ரூ 79,100/– தொடர்பாக சம்பந்தப்பட்ட செலவின சீட்டுக்கள் மற்றும் ஆவணங்கள் கோரி பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டன.

மேற்கண்ட பணிகள் யாவும் முறையாக விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படாமலும், மன்ற அனுமதி பெறப்படாமலும் , அளவு புத்தகங்களில் எந்தவிதமான பதிவுகளும் மேற்கொள்ளப்படாமலும், கைபிரதியிலான செலவின சீட்டுக்களின் அடிப்படையிலேயே தொகை பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது உறுதியாகிறது. மேலும் சில செலவின சீட்டுகளில் மேற்படி பேரூராட்சி மன்ற முன்னாள் தலைவர் மேற்படி பணத்திற்கு தானே ஒப்புதல் வழங்கியும் கையொப்பமிட்டுள்ளார். மேலும் சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரது 04.07.2018 நாளிட்ட கடிதத்தில் மேற்படி பேரூராட்சிப் பகுதியில் வண்ணார் தெரு இல்லை என்ற விவரத்தினை தெரிவித்துள்ளார். எனவே மேற்படி செலவினம் ரூ.79,100/– முறையற்ற செலவினமாக கருதப்படுகிறது.

மனுதாரரது பிறிதொரு புகாரில் ஸ்ரீ அம்மன் நகர் என்ற 1 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனைப்பிரிவிற்கு சர்வே எண்.394ல் முன்னாள் பேரூராட்சி தலைவி திருமதி. க.முருகேஸ்வரி தன்னிச்சையாக அதிகார துஷ்பிரயோகம் செய்து மனைப்பிரிவு அனுமதி வழங்கியுள்ளதாகவும், மதுரை நகரமைப்புத் துணை மண்டல அலுவலர் அவர்களால் வழங்கவேண்டிய மனைப்பிரிவு அனுமதியினை சுமார் ரூ.10.00 லட்சம் கையூட்டு பெற்றுக் கொண்டு மேற்படி பேரூராட்சித் தலைவியே மனைப்பிரிவிற்கான வரைபட அனுமதி வழங்கியுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. 1611.2016 அன்று எதிர் மனுதாரர் திருமதி க.முருகேஸ்வரி, சேத்தூர் பேரூராட்சியின் முன்னாள் தலைவரிடம் விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி விசாரணையின்போது புகார் மனுக்களில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் உண்மையல்ல என்று மறுப்பு தெரிவித்துள்ளதுடன் வீட்டு மனை சம்பந்தப்பட்ட அங்கீகாரத்தில் செயல் அலுவலர்தான் கையெழுத்து போடுவார் என மேற்படி எதிர் மனுதாரர் தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 12.06.2017 நாளிட்ட அறிவிப்பாணையின் மூலம் விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சியில் புல எண்.394ல் ஒரு ஏக்கர் மேற்படி பேரூராட்சி மன்றத் தலைவர் மூலம் மனைப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட புகார்களின் அடிப்படையில் சில கூடுதல் விவரங்களை சமர்ப்பிக்க பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை மண்டலம் அவர்களுக்கு ஆணையிடப்பட்டது.

மேற்கண்ட ஆணைகளின்படி மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் உரிய விசாரணை/ஆய்வு மேற்கொண்டு, தனது அறிக்கையினை நக.எண்.1766/2015/பே.1/நாள்.21.07.2017ன்படி கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

சேத்தூர் பேரூராட்சிப் பகுதியில் வீட்டு மனைப் பிரிவுகளை விதிமுறைகளுக்கு முரணாக பேரூராட்சி மன்றத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது தொடர்பாக, சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண்.188/2015/அ.1/நாள்.31.08.2015ன்படி காவல் துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், காவல்துறையால் நாளது தேதி வரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், மேலும் காவல்துறை மூலம் முதல் தகவல் அறிக்கை ஏதும் பதிவு செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கீகாரமற்ற மனையின் மொத்தப் பரப்பளவு 99.26 சென்ட் என்றும் அதில் பொதுப் பயன்பாடு ஒதுக்கீடு பேரூராட்சியால் தானமாக பதிவு செய்து பெறப்படவில்லை எனவும், மேற்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 11.08.2017 நாளிட்ட அறிவிப்பாணையில் சேத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் சர்வே எண். 394ல் விதிமுறைகளுக்கு முரணாக முன்னாள் பேரூராட்சித் தலைவரால் தன்னிச்சையாக மனைப்பிரிவுகள் அமைக்கப்பட்டது தொடர்பாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை மண்டலம் அவர்களின் கடித ந.க.எண். 1766/2015/பே/நாள். 21.07.2017 ன் மூலம் வரப்பெற்ற கடிதத்தினை தொடர்ந்து சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரால் இது சம்பந்தமாக கடித எண். 188/2015/நாள் 31.08.2015ன்படி காவல் துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து காவல்துறைக்கு புகார் அனுப்பியது தொடர்பான கோப்பினை இம்முறைமன்ற நடுவத்திற்கு ஒப்படைக்க தெரிவித்து சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண்.43/2015/நாள் 21.09.2017ன் மூலம் தனது அறிக்கையினை கீழ்க்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

மதுரை மண்டலம், விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் நகரமைப்பு அலுவலக அனுமதியின்றியும் பொது பயன்பாட்டிற்கான இடங்களை பேரூராட்சிக்கு பத்திரப்பதிவு மூலம் ஒப்படைக்காமலும், விதிமுறைகளுக்கு முரணாகவும், தன்னிச்சையாகவும் பேரூராட்சிமன்றத் தலைவரால் மனைப்பிரிவு வரைபடங்களை சர்வே எண். 394ல் ஒரு ஏக்கருக்கு அனுமதி வழங்கியுள்ளதாகவும், மேலும் சர்வே எண். 386/1ஏ, 387/2ஏ1, 395/1 மற்றும் 400/சி2 ல் மனைப்பிரிவுகள் அமைத்துள்ளதாகவும், அதற்கு சேத்தூர் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி.க.முருகேஸ்வரி என்பவரும், அவரது கணவர் திரு.கருப்பையா என்ற ராஜாவும் சேர்ந்து அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் அவர்கள் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்க வேண்டியும் சேத்தூர் பேரூராட்சித் துணைத் தலைவர் திரு.செ.சுப்பிரமணியன், என்பவரால் முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு மனு செய்யப்பட்டதாகவும், மேற்படி தலைவர் மீது நடவடிக்கை எடுக்க பேரூராட்சி செயல் அலுவலரால் இயலாது என்பதால் உயர் அலுவலரான பேரூராட்சிகளின் உதவி இயக்குநருக்கு முதலமைச்சரின் தனிப்பிரிவில் இருந்து தகவல் அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித ந.க.எண்.38656/2015/பே.3/நாள் 19.08.2015ல் புகாரில் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் சரிபார்த்து உண்மை இருப்பின், உரிய காவல்துறை நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதாகவும், இதன் அடிப்படையில் அப்போதைய சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.கோ.பாலமுருகன் என்பவருக்கு பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் அவசரக் குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் சேத்தூர் பேரூராட்சியின் அப்போதைய செயல் அலுவலர் திரு.கோ.பாலமுருக்ன், என்பவரால் காவல்துறைக்கு, கடித ந.க.எண். 188/2015/அ.1/ நாள்.31.08.2015ன்படி அனுப்பப்பட்டதாகவும், அதற்குரிய மனு ரசீதோ, முதல் தகவல் அறிக்கையோ முன்னாள் செயல் அலுவலரால் பெறப்படவில்லை எனவும், அதன் பின்னர் திரு.கோ.பாலமுருகன் என்பவர் வேறு பேரூராட்சிக்கு மாறுதலில் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் திரு.இ.முருகன் என்பவர், பேரூராட்சி செயல் அலுவலராக பணியேற்றதாகவும், இது சம்பந்தமாக தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் 28.06.2016ல் இப்பொருள் தொடர்பான விசாரணை நடைபெற்றுள்ளதை குறிப்பிட்டு, மேற்படி முறைமன்ற நடுவ விசாரணைக்கு பின்னர், முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.59/2016/நாள். 11.08.2017ல் மேற்படி பொருள் சம்பந்தமான அசல் கோப்புகளை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டதைத் தொடர்ந்து தான் மேற்படி பேரூராட்சியில் கோப்புகளை தேடி பார்த்ததில் கையிருப்பில் இருந்த கோப்புகளை 28.08.2017ல் சமர்ப்பித்ததாக சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.இ.முருகன் தெரிவித்துள்ளார்.

அதன் பின்னர் முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.59/2016/நாள்.12.09.2017ன்படி முழு வடிவிலான கோப்பினை தனி நபர் மூலம் சமர்ப்பிக்க அறிவுறுத்தியதின் பேரில், சேத்தூர் பேரூராட்சி அலுவலகத்தில் ஏற்கனவே சமர்ப்பித்த கோப்புகள் தவிர வேறு ஆவணங்கள் இல்லை எனவும், இப்பொருள் சம்பந்தமான கோப்புகள் எதனையும் முன்னாள் செயல் அலுவலர் திரு.கோ.பாலமுருகன் என்பவரால் தன்னிடம் ஒப்படைக்கப்படவில்லை எனவும் தெரிவித்து மேற்படி பொருள் சம்பந்தமான கோப்பு திரு கோ.பாலமுருகன் என்பவரிடம் தான் இருந்து வந்ததாகவும், அவர் தற்போது அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிவதாகவும் சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

சேத்தூர் பேரூராட்சியின் முன்னாள் தலைவரால் முறைகேடாக மனைப்பிரிவு அங்கீகாரத்தில் கையொப்பமிட்டு வழங்கியது மற்றும் இது குறித்து காவல் துறையினருக்கு புகார் அளித்தது குறித்தான பேரூராட்சியின் அசல் கோப்பினை அனுப்பிடக் கோரி இம்முறைமன்ற நடுவத்தால் சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, சேத்தூர் பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் திரு.இ.முருகன் என்பவரின் 21.09.2017 நாளிட்ட அறிக்கையில் மேற்படி கோப்பு எண்.(43/15) சேத்தூர் பேரூராட்சியில் அசல் கோப்பு இல்லை எனவும், மேற்படி கோப்பு அப்போதைய செயல் அலுவலர் திரு கோ. பாலமுருகன் என்பவரிடம் இருக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்தார். இதே செயல் அலுவலர் தனது 28.09.2017 நாளிட்ட கடிதத்தில் மேற்படி கோப்பினை மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அலுவலகத்தில் இருந்து பெற்று சமர்ப்பிக்க கால அவகாசம் கோரியும் கடிதம் எழுதியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து, இம்முறைமன்ற நடுவ 05.10.2017 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி மனைப்பிரிவு அமைத்த கோப்பு குறித்து தற்போதைய சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதத்தின்படி உரிய விசாரணை மேற்கொண்டு கோரப்பட்ட கோப்பினை இம்முறைமன்ற நடுவத்தில் ஒப்படைக்க பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை மண்டலம் அவர்களுக்கு 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 6(4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் கடித ந.க.எண்.1766/2015/பே.1/நாள் 20.11.2017ன்படி மேற்படி பொருள் சம்பந்தமான கோப்பு எண்.43/2015 ன் அசலினை இணைத்து அனுப்பிவைக்கப்பட்டது.

பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், மதுரை மண்டலம் அவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட கோப்பு எண் 43/2015 இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டதில் மேற்படி கோப்பில் கீழ்க்காணும் குறைபாடுகள் காணப்பட்டன:-

(1) 43/2015 கோப்பு என அலுவலக குறிப்புகள் தற்போது கணினியில் புதியதாக தயார் செய்யப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.
(2) மேற்படி குறிப்பு கோப்பில் பக்கம் எண்.1ல் எவருடைய கையொப்பமும் இல்லை.
(3) அடுத்த பக்கத்தில் 30.11.2015 என குறிப்பிட்டு ஒரே ஒரு அலுவலரால் மட்டுமே கையொப்பமிடப்பட்டுள்ளது.
(4) அதேபோல் 30.11.2015க்குப் பின்னர் 17.10.2016, 13.07.2017, 28.08.2017, 19.09.2017, 21.09.2017, 28.09.2017 ஆகிய தேதிகளிட்டு அதே நபரால் மட்டுமே சுருக்கொப்பமிடப்பட்டுள்ளது.
(5) கோப்பு துவங்கப்பட்ட முதல் கடிதத்தின் மீது பகிர்மாண எண். 43/2015 என எண்ணிடப்படவில்லை.
(6) மேற்படி கோப்பில் உள்ள சுருக்கொப்பங்களையும், அக்கோப்பில் உள்ள 30.11.2015 நாளிட்ட கடிதத்தினையும் ஒப்பு நோக்கியதில் தற்போதைய செயல் அலுவலர் திரு.இ.முருகன் என்பவரது சுருக்கொப்பம்தான் என உறுதி செய்ய ஏதுவாகிறது.

(7) சேத்தூர் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திரு கோ.பாலமுருகன், காவல்துறைக்கு அனுப்பப்பட்ட தனது 31.08.2015 நாளிட்ட கடிதத்தில், "வரைபடத்தில் உள்ள கையொப்பம் தலைவரின் கையொப்பத்துடன் ஒத்துப்போகவில்லை எனவும், தலைவரின் கணவர் திரு.ராஜா என்பவரால் போடப்பட்டுள்ள ஆள் மாறாட்ட கையொப்பமாக சந்தேகம் உள்ளது " எனவும் குறிப்பிட்டுள்ளார்.

(8) தற்போதைய சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் திரு இ.முருகன் என்பவரது 17.10.2016ம் நாளிட்ட காவல்துறைக்கு முகவரியிட்ட கடிதத்தில் விதிமுறைகளுக்கு முரணாக முன்னாள் தலைவர் தன்னிச்சையாக வரைபட அங்கீகாரம் செய்து கையொப்பமிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

(9) 21.09.2017ம் நாளிட்ட தற்போதைய சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையில் காவல் நிலையத்தினை தொடர்பு கொண்டதில் இன்றைய தேதியில் புதிதாக கடிதம் அனுப்பி வைக்கும்பட்சத்தில் காவல்துறை துணைக் கண்காணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுப்பதாக தெரிவிக்கப்பட்டதென குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறான தொடர் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

(10) மேலும், காவல்துறைக்கு அனுப்பப்பட்டதாக குறிப்பிட்டுள்ள 31.08.2015 மற்றும் 17.10.2016 நாளிட்ட கடிதங்கள் அனுப்பப்பட்டமைக்கான முத்திரைகள் ஏதுமில்லை. ஆனால் 17.10.2016 நாளிட்ட கடிதம் 18.10.2016 ல் ஒப்படைக்கப்பட்டது போன்று ஒரு ஒப்பத்துடன் (காவல்நிலைய) கூடிய பதிவேடு எடுபிரதியும் 31.08.2015 நாளிட்ட (ந.க.எண்.188/2015) 31.08.2015ல் உள்ளூர் தபாலில் வழங்கப்பட்டதாக ஒரு எடுபிரதியும் உள்ளது. இதில் மேலொப்பமிட்டுள்ள தற்போதைய செயல் அலுவலர் முழு கையொப்பமிட்டுள்ளார்.

(11) இக்கோப்பில் உள்ள கடிதப் போக்குவரத்து அனைத்தும் 188/2015, அ.1 என உள்ள நிலையில் குறிப்புக் கோப்பு மட்டும் (தற்போது புதிதாக தயார் செய்யப்பட்டது போல் உள்ளது)43/2015 என உள்ளது.

எனவே காவல் துறைக்கு புகார் அனுப்பப்படாமல் உள்ள நிலை, தொடர் நடவடிக்கை எடுக்காத நிலை போன்றவை குறித்தும் இம்முறைமன்ற நடுவத்தால் அசல் கோப்பு கோரப்பட்ட நிலையில் உண்மை நிலையினை மறைத்து போலியாக கோப்பு உருவாக்கப்பட்டுள்ளதோ என்ற ஐயப்பாடுகள் குறித்து விளக்கங்கள் பெறப்படவேண்யிருந்ததால் சேத்தூர் பேரூராட்சியின் முன்னாள்/இந்நாள் செயல் அலுவலர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோரை விசாரிக்கப்படவேண்டுமென முடிவெடுக்கப்பட்டு முறைமன்ற நடுவத்தால் அவ்வாறே ஆணையிடப்பட்டது.

இதனிடையே இம்முறைமன்ற நடுவ 07.12.2017 நாளிட்ட அறிவிப்பாணையில் விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சியின் முன்னாள் பேரூராட்சித் தலைவர் தன்னிச்சையாக மனைப்பிரிவுகள் அங்கீகரித்தது தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கோரி வரப்பெற்ற புகார் மனுவினையடுத்து, சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரால் 31.08.2015ல் சேத்தூர் காவல் நிலைய ஆய்வாளருக்கு எழுதப்பட்ட கடிதம் சம்பந்தமாக, மேற்படி கடிதம் காவல் நிலையத்தில் பெறப்பட்ட விவரம், அதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை, முதல் தகவல் அறிக்கை, மற்றும் அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை பேரூராட்சி செயல் அலுவலரால் கோரப்பட்டமைக்கு, சேத்தூர் காவல் நிலைய ஆய்வாளரால் இன்றைய தேதியில் புதிதாக கடிதம் அனுப்பிவைக்கும் பட்சத்தில் காவல் துறை துணை கண்காணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்ததாக சொல்லப்பட்ட கருத்துக்களின் உண்மை நிலையினை தெரிவிக்கக் கோரி சேத்தூர் காவல் நிலைய ஆய்வாளருக்கு ஆணையிடப்பட்டது.

சேத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் தனது 20.12.2017 நாளிட்ட அறிக்கையில் சேத்தூர் பேரூராட்சித் துணைத் தலைவர் திரு செ.சுப்பிரமணியம் என்பவர், தனது மனுவில் சேத்தூர் பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வீட்டு மனைப் பிரிவுகளை விதிமுறைகளுக்கு முரணாக அனுமதித்து பேரூராட்சி மன்றத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது தொடர்பாக சேத்தூர் பேரூராட்சிக்கு ரூ. 2.00 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது என உயர் அலுவலர்களுக்கும் தமிழக முதல்வர் அவர்களுக்கும் மனு அனுப்பிவைத்துள்ளதாகவும், அதனை அப்போதைய சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித எண். 188/2015/அ.1/நாள் 31.08.2015ன் மூலம் மேலொப்ப கடிதத்துடன் சேத்தூர் காவல் நிலையத்தில் 31.08..2015ல் சேத்தூர் பேரூராட்சி தபால் அனுப்பும் பதிவேட்டில் பதிவு செய்து கொடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் முறைகேடுகள் நடந்தமைக்கான எந்த ஆதாரங்களும் இணைக்கப்படாமல் கொடுத்ததால் இப்புகார் சம்பந்தமாக மனுதாரர் திரு செ.சுப்பிரமணியம் என்பவரிடம் வாக்குமூலம் பெற்றும், அப்போதைய பேரூராட்சி செயல் அலுவலரான திரு.கோ.பாலமுருகன் என்பவரிடம் இப்புகார் சம்பந்தமான கோப்புகளை கேட்டதில், தான் சேத்தூர் பேரூாட்சி செயல் அலுவலர் கூடுதல் பொறுப்பில் உள்ளதாகவும், இது குறித்து பேரூராட்சி நிர்வாகத்தில் பெற்றுக் கொள்ள தெரிவித்ததாகவும் தனது கடிதத்தில் சேத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் தெரிவித்துள்ளார். இதன் அடிப்படையில் முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு பதில் அறிக்கை அனுப்பப்பட்டதாகவும், இது சம்பந்தமாக முதல் தகவல் அறிக்கை எதுவும் பதிவு செய்யப்படவில்லை எனவும் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார். முறைகேடுகள் நடந்தமைக்கான சட்டபூர்வமான ஆவணங்கள் பதிவேடுகள் ஏதும் மனுவுடன் இணைத்தோ, கோரிய போது மனுதாரர் திரு செ.சுப்பிரமணியம், மற்றும் சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்டதாக தெரியவில்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் அது முதல், சேத்தூர் வட்ட ஆய்வாளர் மற்றும் ஒரு காவல் ஆய்வாளரும் பணி மாறுதலில் சென்று விட்டதாகவும் தற்போதைய ஆய்வாளர் வந்து ஒரு வருடம் கடந்த நிலையில் இம்மனு சம்பந்தமாக சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலர் காவல் நிலையத்தை அணுகவில்லை எனவும் தெரிவித்து இதன் அடிப்படையில் தொடர் நடவடிக்கை எதுவும் எடுத்ததாக தெரியவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து சேத்தூர் பேரூராட்சிப் பணியாளர் திரு.முனியாண்டி என்பவர் 22.09.2017ல் சேத்தூர் காவல் நிலைய ஆய்வாளரிடம் 31.08.2015ல் அளித்த புகார் மனுவினை காட்டி உடனடியாக விவரம் கேட்டதாகவும், மேற்படி காவல் நிலைய ஆய்வாளர் தற்போது மேற்படி மனுவினை புதிதாக அளித்தால், தான் அது சம்பந்தமாக மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளரிடம் புகார் மனுவினை காட்டி அதற்கான பதில் அளிப்பதாக தெரிவித்ததாக தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலரால் விருதுநகர் மற்றும் இராஜபாளையம் காவல் துறை துணைக் காவல் கண்காணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்ட மனு சம்பந்தமாக மாவட்ட காவல் அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட அ.தி.க.எண். G.3/43381/291/2017 நாள்.05.10.2017ன்படி கடிதம் வரப்பெற்று உரிய பதிலறிக்கை சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டதாக தெரிவித்து அதன் விவரங்களை இணைத்து சேத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

11.01.2018ஆம் தேதி இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான சேத்தூர் பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் திரு.கோ.பாலமுருகன் தனது வாக்குமூலத்தினை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தான் சேத்தூர் பேரூராட்சியில் செயல் அலுவலராக 31.07.2015 முதல் 31.08.2015 வரை பணிபுரிந்துள்ளதாக தெரிவித்துள்ளார். அப்போது திருமதி. முருகேஸ்வரி என்பவர் பேரூராட்சியின் தலைவராக இருந்ததாகவும், அங்கீகாரமற்ற மனைகளுக்கு அவரே கையொப்பமிடப்பட்ட நிகழ்வுகள் ஏதும் நடக்கவில்லை எனவும், ஆனால் தனது பணிக்காலத்திற்கு முன்பு அது போன்ற செயல், பேரூராட்சித் தலைவர் திருமதி

முருகேஸ்வரியால் நிகழ்த்தப்பட்டது என அலுவலக பணியாளர்கள் தன்னிடம் சொன்னதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் இது சம்பந்தமாக கடிதம் கொடுத்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னதைத் தொடர்ந்து, தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக தெரிவித்துள்ளார். செயல் அலுவலரின் ஒப்புதலின்றி பேரூராட்சித் தலைவரே கையொப்பமிட்டு அங்கீகாரமற்ற மனைகளை அங்கீகாரம் செய்த முறை தவறிய செயல்களை விசாரித்து முறையான நடவடிக்கை எடுக்குமாறு சேத்தூர் நகர காவல் நிலைய ஆய்வாளரிடம் கடிதம் கொடுக்கப்பட்டு உள்ளூர் தபால் பதிவேட்டில் குறிப்புகள் எழுதப்பட்டு 31.08.02015ல் கொடுக்கப்பட்டதாகவும், அதற்கு ஒப்புதல் ஏதும் காவல் துறையினரால் வழங்கவில்லை எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். இதன் நகல் மாவட்ட ஆட்சியர் மற்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டதாகவும், தான் பணியில் இருந்து விடுவிக்கப்பட்ட அன்றுதான் மேற்படி கடிதம் கொடுக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். இக்கடிதத்தின் நகல் உதவி இயக்குநர், மாவட்ட ஆட்சியர், காவல்துறை துணை கண்காணிப்பாளர் மற்றும் நகர் ஊரமைப்புத் துறை துணை இயக்குநர், மதுரை ஆகியோர்களுக்கும் அனுப்பப்பட்டதாகவும், தான் அப்போது மம்சாபுரம் பேரூராட்சியின் செயல் அலுவலராகவும், சேத்தூர் பேரூராட்சியில் கூடுதல் பொறுப்பிலும் இருந்ததாகவும், அதன்பின்னர் மம்சாபுரத்தில் தொடர்ந்து பணிபுரிந்ததாகவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

11.01.2018 அன்று விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் திரு.இ.முருகன் என்பவர் இம்முறைமன்ற நடுவத்தில் தனது வாக்குமூலத்தினை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"……..தான் 04.09.2015 முதல் நாளது தேதி வரை சேத்தூர் பேரூராட்சி செயல் அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும், ஏற்கனவே தன்னால் இந்த விசாரணை குறித்து அறிக்கையும் வாக்குமூலமும் சமர்ப்பிக்கப்பட்டதாகவும், ஏற்கனவே முறைமன்ற நடுவ விசாரணையின்போது தனக்கு நேரிடையாக அளிக்கப்பட்ட அறிவுரையின்படி சேத்தூர் காவல் நிலைய ஆய்வாளரை தொடர்பு கொண்டு தனக்கு முன் பணிபுரிந்த திரு.கோ.பாலமுருகன், அவர்கள் காவல் நிலையத்தில் புகார் செய்த விஷயமாக தொடர் நடவடிக்கை இல்லை என்பதால் அது குறித்து விசாரித்ததாகவும், அவர் சரியான பதில் சொல்லவில்லை என்பதால் காவல் துறை கண்காணிப்பாளர், ராஜபாளையம் அவர்களை அணுகியதாகவும் தெரிவித்துள்ளார். காவல் துறை கண்காணிப்பாளரின் கோரிக்கையின்படி தன்னால் 19.10.2017 அன்று புதிதாக ஒரு மனு சமர்ப்பிக்கப்பட்டதாகவும், அதன் நகலை தற்போது இணைத்துள்ளதாகவும் தெரிவித்து, அங்கீகாரமற்ற மனைப்பிரிவுகளை முன்னாள் பேரூராட்சித் தலைவர் திருமதி.முருகேஸ்வரி என்பவர் லாபம் பெறும் நோக்கத்துடன் கையொப்பமிட்டு அங்கீகாரம் செய்து சட்டத்திற்கு புறம்பாகவும் செயல் அலுவலரின் ஒப்புதல் இன்றியும் செயல்பட்டுள்ளார் எனவும், இதனால் பேரூராட்சிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது எனவும் தனது வாக்குமூலத்தில் பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் திரு.இ.முருகன் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 10.04.2018 நாளிட்ட அழைப்பாணை மூலம் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் வாக்குமூலம் பெற இம்முறைமன்ற நடுவத்தில் 03.05.2018 அன்று ஆஜராகக் கோரி ஆணையிடப்பட்டது.

மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் இம்முறைமன்ற நடுவத்தில் 03.05.2018 அன்று நேரில் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை பதிவு செய்துள்ளார்.

அதில் இம்முறைமன்ற நடுவத்தால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை உறுதி செய்ததுடன், சேத்தூர் பேரூராட்சியின் சம்பந்தப்பட்ட கோப்பில் உள்ள கடித போக்குவரத்து யாவும் 188/2015/அ.1 என்ற நிலையில் உள்ளதாகவும், ஆனால் குறிப்பு கோப்பு மட்டும் தற்போது தயார் செய்தது போல 43/2015 என உள்ளதாகவும் மேற்கண்ட விவரங்கள் யாவும்

கோப்பினை தன்னால் பரிசீலித்து தெரிவிக்கப்பட்டதாகவும், காவல் துறைக்கு புகார் அனுப்பாமலும் தொடர் நடவடிக்கை எடுக்கப்படாமலும் தற்போது கோப்பு உருவாக்கப்பட்டுள்ளது போன்ற தோற்றம் உள்ளதாக மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார்.

முன்னாள் சேத்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு கோ.பாலமுருகன், ஸ்ரீ.அம்மன் நகர் மனைப்பிரிவு வரைபடம் முறைகேடாக பேரூராட்சி தலைவரால் தன்னிச்சையாக கையொப்பமிடப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்பட்டது தொடர்பான புகார் குறித்து சேத்தூர் காவல் நிலைய ஆய்வாளருக்கு அனுப்பியுள்ள 31.08.2015ம் நாளிட்ட புகார் கடிதத்தின் (ந.க.எண்.188/2015/அ.1/நாள்.31.08.2015) நகலினை 28.06.2016 அன்று நடைபெற்ற இம்முறைமன்ற நடுவ விசாரணையின்போது சேத்தூர் பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் திரு இ.முருகன் என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டது. மேற்படி கடிதத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது:-

"....மதுரை மண்டலம், விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சியில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் குறிப்பாணை ந.க.எண்.38656/2015/பே.3/ நாள்.19.08.2015ன்படி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வீட்டுமனைப் பிளாட்டுகளை பணம் பெற்றுக்கொண்டு நகரமைப்பு அலுவலக அனுமதியின்றியும் பேரூராட்சி நிர்வாக அனுமதியின்றியும் பொதுப்பயன்பாட்டிற்கான இடங்களை பேரூராட்சிக்கு பத்திரப் பதிவு மூலம் பெறாமலும் விதிமுறைகளுக்கு முரணாக தன்னிச்சையாக பேரூராட்சி மன்றத் தலைவரால் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி வருவதாகவும், இதனால் பேரூராட்சிக்கு சுமார் ரூ2.00 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், சேத்தூர் கிராமம் சர்வே எண் 394ல் ஒரு ஏக்கர் நிலத்தை பேரூராட்சி மன்றத் தலைவர், மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி கையொப்பமிட்டுள்ளதாகவும் மேலும் சர்வே எண். 386/1ஏ, 387/2ஏ1, 395/1 மற்றும் 400/சி2 ல் மேற்கண்டவாறு பேரூராட்சித் தலைவரால் விதிமுறைகளுக்கு முரணாக தன்னிச்சையாக மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி கையொப்பமிட்டுள்ளதாகவும் இதன் மூலம் சுமார் 10 ஏக்கர் அளவிற்கு வீட்டு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்து பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் அவரது கணவர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்குமாறு உயர் அலுவலரான பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களிடத்திலிருந்து வரப்பெற்ற கடிதத்திற்கிணங்க, மேற்காணும் புகார் மனுவில் உள்ள வரைபட நகலில் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி க.முருகேஸ்வரி அவர்கள் விதிமுறைகளுக்கு முரணாக மனைப்பிரிவு தன்னிச்சையாக அங்கீகரித்து அனுமதியளித்துள்ளது தெரியவருகிறது. எனவே அவர் மீது காவல் துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆகவே மன்றத் தலைவர் திருமதி க.முருகேஸ்வரி மற்றும் அவரது கணவர் மீது உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்."

மேற்கண்ட கடித நகலின் அடிப்படையில் சேத்தூர் பேரூராட்சியின் அசல் கோப்பினை இம்முறைமன்ற நடுவம் பரிசீலித்தது. அதன்படி பேரூராட்சியின் சம்பந்தப்பட்ட கோப்பின் பக்க எண். 9ல் இடம் பெற்றுள்ள அசல் கடிதம் ந.க.எண். 188/2015/அ.1/நாள்.31.08.2015ல் சேத்தூர் காவல் நிலைய ஆய்வாளருக்கு அதே 31.08.2015 ல் முன்னாள் சேத்தூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் திரு கோ.பாலமுருகன் என்பவரால் கீழ்க்கண்டுள்ளவாறாக விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

"....மதுரை மண்டலம், விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சியில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் குறிப்பாணை ந.க.எண்.38656/2015/பே.3/ நாள்.19.08.2015ன்படி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் வீட்டு மனைப் பிளாட்டுகளை பணம் பெற்றுக்கொண்டு நகரமைப்பு அலுவலக அனுமதியின்றியும் பேரூராட்சி நிர்வாக அனுமதியின்றியும் பொதுப்பயன்பாட்டிற்கான இடங்களை பேரூராட்சிக்கு பத்திரப் பதிவு மூலம் பெறாமலும் விதிமுறைகளுக்கு முரணாக தன்னிச்சையாக பேரூராட்சி மன்றத் தலைவரால் மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி வருவதாகவும், இதனால் பேரூராட்சிக்கு

சுமார் ரூ.2.00 கோடி வருவாய் இழப்பு ஏற்பட்டுள்தாகவும், சேத்தூர் கிராமம் சர்வே எண். 394ல் ஒரு ஏக்கர் நிலத்தை பேரூராட்சி மன்றத் தலைவர், மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி கையொப்பமிட்டுள்ளதாகவும் மேலும் சர்வே எண். 386/1ஏ, 387/2ஏ1, 395/1 மற்றும் 400/சி2 ல் மேற்கண்டவாறு பேரூராட்சித் தலைவரால் விதிமுறைகளுக்கு முரணாக தன்னிச்சையாக மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கி கையொப்பமிட்டுள்ளதாகவும், இதன் மூலம் சுமார் 10 ஏக்கர் அளவிற்கு வீட்டு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்து பேரூராட்சி மன்றத் தலைவர் மற்றும் அவரது கணவர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்குமாறு உயர் அலுவலரான பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களிடத்திலிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்காணும் புகார் மனுவில் உள்ள வரைபட நகலில் பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி.க.முருகேஸ்வரி அவர்களுக்கு, கட்டிட வரைபட அனுமதி அளிக்க அதிகாரம் இல்லை. வரைபடத்தில் உள்ள கையொப்பம் தலைவரின் கையொப்பத்துடன் ஒத்துப்போகவில்லை, அது தலைவரின் கணவர் திரு. ராஜா என்பவரால் போடப்பட்டுள்ள ஆள் மாறாட்ட கையொப்பமாக சந்தேகமாக உள்ளது. மேலும் தலைவரும் தலைவரின் கணவரும் சேர்ந்து அதிகார துஷ்பிரயோகம் மற்றும் அரசு விதிமுறைகளுக்கு புறம்பாகவும் எதிராகவும் விதிமுறைகளுக்கு முரணாக மனைப்பிரிவு தன்னிச்சையாக அங்கீகரித்து அனுமதி அளித்துள்ளது தெரியவருகிறது. எனவே காவல் துறை மூலம் மன்றத் தலைவர் திருமதி.க.முருகேஸ்வரி மற்றும் அவரது கணவர் திரு. ராஜா என்பவர் மீதும் உரிய விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்."

மேற்கண்டவாறு மாறுபட்ட வாசகங்கள் அடங்கிய கடிதத்தினை காவல் துறைக்கு வழங்கியது குறித்து மேற்படி செயல் அலுவலர் முறைமன்ற நடுவ விசாரணையின்போதோ அல்லது தனது வாக்குமூலத்திலோ எதுவும் குறிப்பிடவில்லை. மேலும் 28.06.2016 அன்று நடைபெற்ற விசாரணையின்போது திரு.இ.முருகன், செயல் அலுவலர், மேற்படி புகார் குறித்து காவல் துறை விசாரித்து வரைபடத்தில் உள்ள கையெழுத்து பேரூராட்சித் தலைவயின் கையெழுத்து இல்லை என்று கோப்பினை முடித்துவிட்டார்கள் எனத் தெரிகிறது என்று தெரிவித்து வாக்குமூலத்தினை சமர்ப்பித்துள்ளார். முன்னாள் செயல் அலுவலர் திரு.கோ.பாலமுருகன், காவல் துறைக்கு அனுப்பியதாக கோப்பில் உள்ள மாறுபட்ட கடிதத்தின் (31.08.2015) காவல் துறையினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு முடிவெடுக்கப்படவேண்டிய நிலையில் வரைபடத்தில் உள்ள கையொப்பம் தலைவரின் கையொப்பத்துடன் ஒத்துப்போகவில்லை என்று எந்த புலன் விசாரணையின் அடிப்படையில் தெரிவித்துள்ளார் என்பதற்கான ஆதாரங்கள் ஏதும் இல்லை.

சேத்தூர் பேரூராட்சியின் அசல் கோப்பு எண்.43/2015 ஐ முழுமையாக பரிசீலித்ததில் மேற்படி கோப்பின் அலுவலகக் குறிப்பு புதிதாக ஏற்படுத்தப்பட்டு 30.11.2015, 17.10.2016, 13.07.2017, 28.08.2017, 19.09.2017, 21.09.2017, 28.09.2017 ஆகிய தேதிகளில் ஒரே ஒரு நபரால் அதாவது செயல் அலுவலர் திரு இ. முருகன் என்பவரால் மட்டுமே சுருக்கொப்பம் இடப்பட்டுள்ளது. இவர் அந்த அலுவலகத்தில் செயல் அலுவலராக பணிபுரியாத காலத்திற்கும் இவரே சுருக்கொப்பம் இட்டுள்ளார். இவர் 17.10.2016 நாளிட்ட கடிதத்தில் விதி முறைகளுக்கு முரணாக முன்னாள் பேரூராட்சித் தலைவர் தன்னிச்சையாக வரைபட அங்கீகாரம் செய்து கையொப்பமிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். மேலும், மேற்படி அலுவலரது 21.09.2017 நாளிட்ட அறிக்கையில் காவல் நிலையத்தினை தொடர்பு கொண்டதில் இன்றைய தேதியில் புதிதாக கடிதம் அனுப்பி வைக்கும்பட்சத்தில் துணைக் கண்காணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறான எந்தவித தொடர் நடவடிக்கையும் மேற்படி செயல் அலுவலரால் எடுக்கப்படவில்லை. எனவே செயல் அலுவலர்கள் திரு.கோ.பாலமுருகன், மற்றும் திரு.இ.முருகன் ஆகிய இருவரும் இவ்வினத்தை பொறுத்தவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததின் அடிப்படையில், பேரூராட்சியில் அங்கீகாரமற்ற வகையில் முறைகேடாக கையொப்பமிடப்பட்டு பொதுமக்களை

ஏமாற்றும் வகையில் ஏற்படுத்தப்பட்ட மனைப்பிரிவு தொடர்பான முறைகேடுகள் மற்றும் அதனால் பேரூராட்சிக்கு ஏற்பட்ட நிதியிழப்பு போன்றவைகளுக்கு துணை போகியுள்ளதாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

எனவே இம்முறையீட்டு மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவத்தால் கீழ்க்கண்டவாறான ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன :-

1. முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள செலவினத் தொகை ரூ 79,100/– முறையற்ற செலவினமாக கண்டறியப்பட்டுள்ளதால் அதற்கு பொறுப்பான செயல் அலுவலர், உதவிப் பொறியாளர் மற்றும் முன்னாள் பேரூராட்சித் தலைவர் ஆகியோரிடமிருந்து உரிய விகிதத்தில் வசூலித்து பேரூராட்சிக் கணக்கில் செலுத்தப்படவேண்டுமென ஆணையிடப்படுகிறது ;
2. மேலும், விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சி பகுதியில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவான ஸ்ரீஅம்மன் நகர் மனைப்பிரிவு வரைபடத்தில் முறைகேடாக முன்னாள் பேரூராட்சித் தலைவர் கையொப்பமிட்டது தொடர்பான கோப்பினை முறையாக பராமரிக்காமலும், தொடர் நடவடிக்கை எடுக்காமலும், மேற்படி கோப்பினை விசாரணை மற்றும் ஆய்வுக்கு கோரும் போது கோப்பில் திருத்தங்கள் மேற்கொண்டு புதியதாக கோப்பு தயாரித்து சமர்ப்பித்ததின் அடிப்படையில் இப்பொருள் தொடர்பாக மேற்படி பேரூராட்சியில் குற்றச்செயல்கள் நடந்துள்ளதற்கான அடிப்படை முகாந்திரம் உள்ளதாக அறியப்பட்டதைத் தொடர்ந்து, இதற்கு பொறுப்பான சம்பந்தப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர்கள் மீது உரிய விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ள மாவட்டக் குற்றப் புலனாய்வுத்துறை கண்காணிப்பாளருக்கு பரிந்துரைத்து 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரவு–11–ன் கீழ் அனுப்பப்படுகிறது.
3. முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவான ஸ்ரீஅம்மன் நகர் மனைப்பிரிவு வரைபடத்தில் முறைகேடாக முன்னாள் பேரூராட்சித் தலைவரால் கையொப்பமிட்டு வழங்கப்பட்டுள்ளதால் அதிகார துஷ்பிரயோகம் மற்றும் வருவாய் இழப்பு ஏற்படுத்துதல் தொடர்பாக மாவட்ட காவல் பிரிவின் குற்றப்புலனாய்வுத் துறை மூலம் வழக்கு பதிவு செய்து தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ள பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.
4. அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் தொடர்பாக ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.111/2017, நாள்.12.05.2017ல் மதுரை மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரது 12.08.2016 நாளிட்ட அறிக்கைகளின் அடிப்படையில் சேத்தூர் பேரூராட்சியில் மூன்று மனைப்பிரிவுகளில் (ஸ்ரீ அம்மன் நகர், மேட்டுப்பட்டி மாரியம்மன் நகர் மற்றும் அருணா ரைஸ் மில் வளாகம்) வீட்டு மனை அனுமதி வழங்குவதில் 10 சதவீத பொதுப் பயன்பாட்டு நிலம் பேரூராட்சிக்கு ஒதுக்கீடு பெறப்படாத வகையில் ரூ.1,33,43,932/– பேரூராட்சிக்கு ஏற்பட்டுள்ள நிதி இழப்பீட்டிற்கு பொறுப்பு நிர்ணயித்து சரி செய்யவும், சம்பந்தப்பட்ட செயல் அலுவலர்கள் மீது துறை வாரியான நடவடிக்கை எடுக்கவும் ஆணையிடப்பட்டது. மேற்படி பேரூராட்சி உதவி இயக்குநரது அறிக்கையில் பிறிதொரு மனைப்பிரிவான கட்டபொம்மன் நகர் மனைப்பிரிவும் (13.325. ஏக்கர்) அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு எனவும், கட்டிட அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் 10 சதவீத பொதுப்பயன்பாட்டு நிலம் 1.33 ஏக்கர் ஆகும். எனவே மேற்குறிப்பிட்ட மூன்று மனைப்பிரிவுகள் தொடர்பிலான நிதியிழப்புகள் மட்டுமின்றி கட்டபொம்மன் நகர் மனைப்பிரிவிற்குமான இழப்புத் தொகையினையும் கணக்கிட்டு சம்பந்தப்பட்ட செயல் அலுவலர்களை பொறுப்பாக்கி இழப்பினை சரிகட்டவும் முறைகேடுகளுக்கு பொறுப்பான

அலுவலர்கள் மீது துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ளவும் பரிந்துரைத்து ஆணையிடப்பட்டது. கட்டபொம்மன் நகர் மனைப்பிரிவும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாகும். ஆனால் அம்மனைப்பிரிவில் சுமார் 348 வீடுகள் கட்டப்பட்டுள்ளதாக பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கட்டுமானங்கள் அனைத்திற்கும் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு என்று தெரிந்திருந்தும் பேரூராட்சியால் கட்டிட அனுமதிகள் தொடர்ந்து வழங்கப்பட்டுள்ளன. இம்மனைப்பிரிவு 13.325 ஏக்கர் கொண்டதாகவும், இதில் 10 சதவிகித பொது பயன்பாடு நிலம் 1.33 ஏக்கர் (5352 சதுர மீட்டர்) ஆகும். மேற்படி சதவிகித பொது பயன்பாட்டு நிலத்தின் தோராய மதிப்பீடு ரூ.1,94,29,020/– என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் கட்டிடம் கட்டிட விதிகளை மீறி அனுமதிகள் மட்டும் வழங்கப்பட்டு பொதுப் பயன்பாடு நிலம் பெறப்படாத வகையில் செயல்பட்டுள்ளதால், பேரூராட்சிக்கு, மேற் குறிப்பிட்டுள்ளவாறு மொத்தம் (ரூ.1,33,43,982/– +ரூ.1,94,29,020–)ரூ.3,27,72,952/– இழப்பு மட்டுமின்றி, இம்மனைப்பிரிவில் பேரூராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ள அனைத்து அடிப்படை வசதிகளுக்கான செலவினமும் பேரூராட்சிக்கு ஏற்பட்டுள்ள நிதி இழப்பாக கருதப்பட வேண்டியுள்ளது. எனவே இவ்வாறான இழப்பினை ஈடு செய்யவும், சம்பந்தப்பட்ட செயல் அலுவலர்கள் மீது கடுமையான துறைவாரியான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு பரிந்துரைத்து ஆணையிடப்படுகிறது. மேலும் மேற்குறிப்பிட்ட ஸ்ரீ அம்மன் நகர் மனைப்பிரிவு வரைபடத்தில் முறைகேடாக கையொப்பமிடப்பட்டுள்ளது குறித்து சரியான மற்றும் உறுதியான நடவடிக்கைகள் ஏதும் பேரூராட்சி செயல் அலுவலரால் மேற்கொள்ளப்படாதது உறுதியாவதால் சம்பந்தப்பட்ட செயல் அலுவலர்கள் மீது தக்க ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறும் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 02–ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்

பெறுநர்
1.திரு. எஸ். சண்முகவேல்,
42, பிள்ளையார் தென்வடல் தெரு,
சேத்தூர் – 626121,
இராஜபாளையம் வட்டம்,
விருதுநகர் மாவட்டம்.
2.செயல் அலுவலர்,
சேத்தூர் பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

3.திருமதி.முருகேஸ்வரி,
முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர்,
சேத்தூர் பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம்.

4.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை – 108.121.

5.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
மதுரை மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மதுரை

6.மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்,
குற்றவியல் புலனாய்வுப் பிரிவு,
மதுரை மாவட்டம்.